இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

## எஸ். குஹதாசன் எதிர் பிரதேச செயலகம்- மாந்தை மேற்கு

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கான மேன்முறையீடு [நேரடி விசாரணை] [**691/2021]- 22.12.2021** அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சந்திப்பின் ஒரு பகுதியாக ஏற்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 32[1] இன் கீழான ஆணை மற்றும் 2017 ஆம் ஆண்டு தகவலறியும் உரிமை விதிகளின், விதி 28 இன் கீழான நடபடிமுறைகளின் குறிப்பு [கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள்]

**தலைவர் :** நீதவான் உபாலி அபயரட்ன
**ஆணைக்குழு உறுப்பினர்:** சிரேஷ்ட சட்டத்தரணி செல்வி கிஷாலி பின்டோ ஜயவர்தன
**ஆணைக்குழு உறுப்பினர்:** நீதவான் ரோஹினி வல்கம

**மேன்முறையீட்டாளர்:** எஸ். குஹதாசன்
**அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், பிரதேச செயலகம் - மாந்தை மேற்கு

**வருகை/ பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது :**
**மேன்முறையீட்டாளர்:** சமூகமளிக்கவில்லை
**பகிரங்க அதிகார சபை:** எஸ். வினோதன் (MSO) மற்றும் எம். ஜெபமயூரன்- பிரதேச செயலகத்தின் உதவி மாவட்ட செயலாளர்- மாந்தை மேற்கு

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்ட திகதி** | 09.12.2020 |
| **தகவல் அலுவலர் பதிலளித்த திகதி** | 11.12.2020 (ஒப்புகை) |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலகரிற்கு மேன்முறையீடு செய்த திகதி** | 01.02.2021 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்த திகதி** | பதிலளிக்கவில்லை |
| **தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்த திகதி** | 15.02.2021 |

**நிகழ்வு பின்னணியின் சுருக்கம்:**

09.12.2020 எனத் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கையினூடாக மேன்முறையீட்டாளர், பின்வரும் தகவலை கோரினார்.

1. *''நீலவெட்டிய குளத்தின் கீழ் நிலத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள்*
2. *மேற்கூறப்பட்ட குறிப்பிடப்பட்ட காணி அனுமதியை வழங்கு முன், காணி தொடர்பான ஏற்பாடுகளுடன் தொடர்புடைய தீர்மானங்களின் முழு விபரம்.*
3. *காணி அனுமதி வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி.*

4. *இந்த பயனாளிகளுக்காக காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?*
5. *நீலவெட்டிய குளத்தில் எத்தனை ஏக்கர்கள் உள்ளது? எத்தனை ஏக்கர்கள் பயிர்செய்கைக்கு உட்பட்டுள்ளது?"*

தகவல் அலுவலர் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் பதில் வழங்க தவறியமையினால், மேன்முறையீட்டாளர் 01.02.2021 அன்று குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீடு செய்திருந்தார். குறித்தளிக்கப்பட்ட அதிகாரியும் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலத்துள் பதில் வழங்க தவறியமையினால், மேன்முறையீட்டாளர் 12.02.2021 அன்று ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை நாடினார்.

**விசாரனையின் போது தோன்றிய விடயங்கள்:**
விசாரனைக்கு பகிரங்க அதிகாரசபை சமூகமளித்திருந்த போதும் மேன்முறையீட்டாளர் வருகைதரவில்லை.

பகிரங்க அதிகாரசபையானது ஏற்கனவே, மேன்முறையீட்டாளருக்கு 13.05.2021 அன்று தகவல் வழங்கியதாக குறிப்பிட்டு அத்தகவலின் பிரதியொன்றையும் ஆணைக்குழு முன்னிலையில் சமர்பித்தது.

**ஆணை:**
தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 25(1) மற்றும் 31(3)இல் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறையை பின்பற்றி பகிரங்க அதிகார சபையானது தகவலுக்கான கோரிக்கைக்கு/ மேன்முறையீட்டுக்கு பதிலளிக்க தவறியுள்ளது என்பதை ஆணைக்குழு அவதானித்தது. அதன்படி பகிரங்க அதிகார சபையின் அவதானம் மேற்குறிப்பிட்ட பிரிவில் செலுத்தும் பிரகாரம் மீள் பதிவு செய்யப்பட்டது.

பிரிவு 25 (1):

*ஒரு தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாக, எச்சந்தர்ப்பத்திலும் 24ஆம் பிரிவின் கீழான கோரிக்கை ஒன்றின் பெறுகையின் பதின்நான்கு வேலை நாட்களுக்குள் 14 (உ) என்னும் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட கட்டண அட்டவணைக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின் மீது கோரப்பட்ட தகவலை ஒன்றில் வழங்குவதற்கு அல்லது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதுக்களின் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீது வேண்டுகோளை நிராகரிப்பதற்கு முடிபு ஒன்றை எடுத்தல் வேண்டும் என்பதுடன் கோரிக்கை விடுத்த பிரசைக்கு அத்தகைய முடிபை உடனடுத்து அறிவித்தலும் வேண்டும்.*

பிரிவு 31(3) பின்வருமாறு:

*ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் மீதான முடிபு, மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து மூன்று வாரங்களினுள் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் முடிபுக்கான குறித்த ஏதுக்கள் உட்பட சொல்லப்பட்ட முடிபுக்கான காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.*

பகிரங்க அதிகாரசபையானது மேன்முறையீட்டாளருக்கு தகவலை அனுப்பியதன் அடிப்படையில் மேன்முறையீடு முடிவடைந்தது. மேன்முறையீட்டாளருக்கு உரிய தகவல் கிடைக்கப்பெறாவிட்டால்

அல்லது வழங்கப்பட்ட தகவல் திருப்பதியளிக்கவில்லை என்றால், இந்த கட்டளை கிடைக்கப்பெற்று 1 மாத காலத்துள் எழுத்து மூலம் ஆணைக்குழுவிற்கு இதனை அறிவிக்க வேண்டுமென மேன்முறையீட்டாளருக்கு அறியப்படுத்தப்பட்டது.

***இத்துடன் இம்மேன்முறையீடு நிறைவடைந்தது.***

கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள் தொடர்பான ஆணைக்குழுவின் விதிகளில் (வர்த்தமானி இல. 2004/66, 03.02.2017) 27(3) ஆம் ஒழுங்குவிதிக்கு அமைய ஆணை இரு திறத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டது.